## May 25, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பெரிதும் எதிர் பார்க்கப்படும் இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன.

(i) தில்லியில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இடையே l நடைபெற்ற விரிவான பேச் சுவார்த்தையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(ii) வர்த்தகம், இறக்குமதி வரி, குடியேற்றம், நுழைவு இசைவு (விசா) உள்ளிட்டவை தொடர்பான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் கொள்கைகளால் இந்திய-அமெரிக்க உறவுகள் கடந்த ஓராண்டாக பின்னடைவுக்கு உள்ளாகின.

(iii) இருதரப்பு உறவைச் சீரமைக்கும் நோக்கத்தின்கீழ், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ 4 நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்தார்.

(iv) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் நுழைவு இசைவு (விசா) மற்றும் குடியேற்றக் கொள்கை மாற்றங்கள் குறித்து வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவிடம் எஸ்.ஜெய்சங்கர் கவலை தெரிவித்தார்.

- டிரம்ப் நிர்வாகத்தின் புதிய குடியேற்றக் கொள்கை மற்றும் ஹெச்1பி விசா கட்டணம் பன்மடங்கு உயர்வு போன்ற நடவடிக்கைகளால் இந்தியப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் கிரீன் கார்டு (நிரந்தர குடியிருப்பாளர் அட்டை) பெறுவதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களின் சொந்த நாட்டுக்கு திரும்பிச் சென்று, அங்கிருந்தே விண்ணப்பிக்க வேண்டும் என்ற கெடுபிடியான விதிமுறை குறித்து கவலைகள் எழுந்துள்ளன.
- இந்த விவகாரம் தொடர்பாக பதிலளித்த ரூபியோ, 'கடந்த சில ஆண்டுகளில் அமெரிக்காவுக்குள் 2 கோடிக்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக நுழைந்ததால் குடியேற்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது, இந்தியாவால் ஏற்பட்டதல்ல, பரவலாக ஏற்பட்டதாகும். இந்த சவாலுக்கு தீர்வுகாண்பதற்காக, குடியேற்ற அமைப்புமுறையை மேம்படுத்தி வருகிறோம். இந்தச் சீர்திருத்த கால கட்டத்தில் சில சிரமங்களும், முரண்பாடுகளும் இருக்கக் கூடும். எனினும், திறன்மிக்க அமைப்புமுறையால் அனைத்துத் தரப்பினரும் பலனடைவர்' என்றார்.

2.ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் எபோலா நோய்த் தொற்று அதிகரித்துவரும்சூழலில், அந்த நாடுகளுக்கு தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

(i) காங்கோ குடியரசு, உகாண்டா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள எபோலா வைரஸ் பரவலை சர்வதேச கவலைக்குரிய பொது சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து, மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(ii) காங்கோ குடியரசு, உகாண்டா ஆகிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் எபோலா தொற்றால் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்ட நிலையில், 600-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(iii) காங்கோ குடியரசு, உகாண்டா மட்டுமன்றி இந்த நாடுகளையொட்டிய தெற்கு சூடான் போன்ற நாடுகளிலும் எபோலா வைரஸ் பரவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(iv) இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'காங்கோ குடியரசு,

உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு தேவையற்ற பயணங்களை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும். மேலும், தற்போது இந்த நாடுகளில் வசிக்கும் அல்லது பயணம் மேற்கொண்டுள்ளவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கவும், சுகாதார நடவடிக்கைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவும் அறிவுறுத்தப்படுகிறது.

(v) நோயின் அறிகுறிகள் கொண்ட நபர்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்கவும், காய்ச்சல் அல்லது தொடர்புடைய அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவியைப் பெறவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(vi) எபோலா என்பது வைரஸ் மூலம் பரவும் அதிக உயிரிழப்பு விகிதம் கொண்ட கடுமையான ரத்தக்கசிவு காய்ச்சல் நோயாகும்.

- 'பண்டிபுகியோ' வகை எபோலா தொற்றுக்கு எதிராக இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி அல்லது குறிப்பிட்ட சிகிச்சை முறைகள் எதுவும் இல்லை. அதேநேரத்தில், இந்த வகை எபோலா தொற்று இந்தியாவில் இதுவரை எங்கும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3. உக்ரைன் மீது மூன்றாவது முறையாக ஹைப்பர்சோனிக் ஓரேஷ்னிக் பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் ரஷியா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிபர் ஸெலன்ஸ்கி தெரிவித்தார்.

(i) ஒலியின் வேகத்தைவிட பத்து மடங்கு அதிவேகமாகத் தாக்குதல் நடத்தும் திறனுடைய ஓரேஷ்னிக் ஏவுகணை, நிலத்துக்கு அடியில் நான்கு மாடி கட்டடங்களை அழிக்கும் வலிமையுடையது. விண்கல்லைப் போன்று பயணிக்கும் இந்த ஏவுகணை, உலகின் எந்தவொரு ஏவுகணை பாதுகாப்பு அமைப்பையும் தகர்க்கக்கூடியது என ரஷிய அதிபர் புதின் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

4. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் வென்ற வீரர்கள், 2028 ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லத் தேவையான உதவிகளை தமிழக அரசு செய்து தரும் என பொதுப்பணி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

(i) குறிப்பாக வரும் ஒலிம்பிக் போட்டியில் ஸ்குவாஷ் விளையாட்டு முதன்முறையாக சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிட தகுந்ததாகும். கடந்தாண்டு ஸ்குவாஷ் உலகக் கோப்பைப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியில் 4 வீரர்களில் 3 பேர் நம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பெருமைக்குரிய சாதனையாகும். அடுத்த இலக்கு ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கங்கள் வெல்வதேயாகும். அந்த வகையில் 2028-ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்கில் பதக்கங்கள் வெல்ல விளையாட்டு மேம்பாட்டுத் துறை தேவையான உதவிகளையும் வழங்கும் என்றார்.

5. இந்தியர்களின் வெளிநாட்டுப் பயணச் செலவு கடந்த மார்ச் மாதத்தில் ரூ.10043 கோடியாக (1.09 பில்லியன் டாலர்) குறைத்துள்ளதாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) கடந்த ஜனவரியில் இந்தியர்களின் வெளிநாட்டுப் பயணச் செலவு ரூ.15,790 கோடியாகவும் (1.65பில்லியன் டாலர்), பிப்ரவரியில்ரூ.12,441 கோடியாகவும் (1.3 பில்லியன் டாலர்) இருந்த நிலையில், மார்ச் மாதம் குறைந்துள்ளது.

(ii) 'தனிநபர்களுக்கான தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் இந்தியர்களின் வெளிநாட்டுப்பயணம் வெளிநாட்டில் கல்வி பயில்வதற்கான செலவு, உறவினர்களுக்கு அனுப்பப்படும் தொகை முதலீடுகள் தொடர்பான தரவுகளை ரிசர்வ்

வங்கி வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

- மார்ச் மாதத்தில் இந்தியர்களின் ஒட்டுமொத்த வெளிநாட்டுப் பயணச் செலவு 1.09 பில்லியன் டாலராக குறைந்துள்ளது. சர்வதேச சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா, மருத்துவம் மற்றும் கல்விக்கான பயணம் என வெளிநாட்டுப்பயணங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இதில் விடுமுறை காலங்களில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் சுற்றுலா உள்ளிட்ட பிற பயணங்களுக்கு ரூ.5,962 கோடி (623.05 மில்லியன்) செலவிடப்பட்டுள்ளது. இது இந்தியர்களின் ஒட்டுமொத்த வெளிநாட்டுப் பயணச் செலவில் 57 சதவீதமாகும்.
- மார்ச் மாதத்தில் கல்விக்கான வெளிநாட்டுப்பயணச் செலவு ரூ.4,308 கோடியாகவும் (450.16 மில்லியன் டாலர்), வணிகம், மருத்துவம் மற்றும் ஆன்மிகப் பயணத்துக்கான செலவு ரூ.204 கோடியாகவும் (21.39 மில்லியன் டாலர்) உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
- மேற்காசிய போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் தடை பட்டு அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், வெளிநாட்டுப் பயணங்களை இந்தியர்கள் தவிர்க்குமாறு அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார்.
- வெளிநாட்டுப் பயணச் செலவுகளைக் குறைப்பதால் அந்நியப் பரிவர்த்தனை குறைந்து ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைவதைக் குறைக்க முடியும் என்ற நோக்கில் பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்தார். இந்நிலையில், மார்ச் மாதம் இந்தியர்களின் வெளிநாட்டுப் பயணச் செலவு குறைந்தது தெரியவந்துள்ளது.

6. மேக்கேதாட்டு அணை தொடர்புடைய வழக்கில் பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

(i) மறுஆய்வு மனுவை நீதிபதிகளின் தனிப்பட்ட அறையில் விசாரிப்பதற்கு பதிலாக நீதிமன்ற அறையிலேயே விசாரிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை நிராகரித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு, அந்த மனுவை தள்ளுபடி செய்தது.

(ii) மேக்கேதாட்டு சமநிலை நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணியைத் தொடர, கர்நாடக அரசின் ஓர் அங்கமான பெங்களூரைச் சேர்ந்த கர்நாடக காவேரி நீர்வாரி நிகம் நிறுவனத்திற்கு கடந்த 2018, நவ.22-இல் மத்திய நீர் ஆணையம் அனுமதி வழங்கியது. அந்த அனு மதிக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி அதே ஆண்டில் தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

(iii) அந்த மனுவை கடந்த ஆண்டு நவ.13-ஆம் தேதி உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதுதொடர்பாக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், 'மேக்கேதாட்டு சமநிலை நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் திட்டம் எனும் தலைப்பிலான திட்டத்தில், காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டு என்னுமிடத்தில் அணையைக் கட்ட கர்நாடக அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. இப்பிரச்சினை குறித்து ஆராயும் பொறுப்பு ஒரு நிபுணர் குழுவிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக அக்குழு பரிசீலித்து வரும் நிலையில், தமிழக அரசு தாக்கல் செய்த இந்த மனுவானது முற்றிலும் தவறான புரிதலின் அடிப்படையில் அமைந்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு கடந்த ஆண்டு டிச.11-இல் மறுஆய்வு மனு தாக்கல் செய்திருந்தது.

(iv) 'காவிரி வழக்கில் நடுவர் மன்றம் வழங்கிய இறுதி தீர்ப்பிலும் அதனை ஏற்றுக் கொண்டு, சில மாற்றங்களுடன் உச்சநீதிமன்றம் 2018-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பிலும் மேக்கேதாட்டு திட்டத்திற்கு எந்த அனுமதியும் வழங்கப்படாத நிலையில், உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ஏற்றுக் கொள்ள முடியாதது. எனவே அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும்' என அந்த மனுவில் தமிழக அரசு கோரியிருந்தது.

(v) இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் கே. வினோத் சந்திரன், விபுல் எம். பஞ்சோலி ஆகியோரின் தனிப்பட்ட அறையில் கடந்த ஏப்.15-இல் விசாரணைக்குப் பட்டியலிடப்பட்டது. இந்நிலையில், வழக்கு விசாரணையை நீதிபதிகளின் அறைக்குப் பதிலாக நீதிமன்ற அறையிலேயே மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசு முறையிட்டது. இருப்பினும், நீதிபதிகள் அறையில் பரிசீலித்த பின் தமிழக அரசின் மறுஆய்வு மனுவை தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு" தள்ளுபடி செய்தது.

7. அணு ஆயுதக் கட்டுப்பாட்டு குறித்து ஒருமித்த கருத்தை எட்ட சர்வதேச சமூகம் சமீபத்தில் அடைந்த தோல்வி.

(i) மறுஆய்வு மாநாட்டின் தோல்வி

- அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை (NPT) மறுஆய்வு செய்வதற்காக, உறுப்பு நாடுகளின் நான்கு வார கால மாநாடு ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்றது.
- மத்திய கிழக்கில் நடைபெறும் போர் மற்றும் அதிகரித்து வரும் சர்வதேச ஆயுதப் போட்டி உள்ளிட்ட அவசரமான உலகளாவிய சூழல் நிலவியபோதிலும், இம்மாநாடு எவ்வித ஒப்பந்தமும் எட்டப்படாமலேயே முடிவடைந்தது.
- ஒருமித்த கருத்து எட்டப்படாத இந்த நிலை, உலகளாவிய பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஒரு பெரும் ஏமாற்றமாகவே கருதப்படுகிறது.

(ii) NPT-யின் வரலாறு மற்றும் நோக்கங்கள்

- NPT ஒப்பந்தம் 1968-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, மார்ச் 1970-இல் நடைமுறைக்கு வந்தது.
- இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உலகளாவிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமாகும்; இதில் 191 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது: அணு ஆயுதப் பரவலைத் தடுத்தல், அமைதிவழி அணுசக்தி பயன்பாட்டில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஆயுதக் குறைப்புக்கான நோக்கத்தை முன்னெடுத்தல்.
- அணுசக்தி தொழில்நுட்பம் கண்டிப்பாக அமைதிவழி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பு, சர்வதேச அணுசக்தி முகமையிடம் (IAEA) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(iii) கையெழுத்திட்ட நாடுகள் மற்றும் பாகுபாடு குறித்த சிக்கல்

- அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் சீனா உள்ளிட்ட முக்கிய அணு ஆயுத வல்லரசுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட கொரியா போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.
- NPT ஒப்பந்தம் பாகுபாடு காட்டுவதாகக் குறிப்பிட்டு, அதில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், அணு ஆயுதமற்ற நாடுகள் கடுமையான ஆய்வுகளுக்கு உட்படும் பட்சத்தில், தங்கள் குடிமை மற்றும் தொழில்துறைத் தேவைகளுக்காக

அணுசக்தி தொழில்நுட்பத்தை வளர்த்தெடுக்கும் உரிமையைப் பெற்றுள்ளன.

(iv) ஆயுதக் குறைப்பிற்கான தடைகள்

- 1995-ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் காலவரையறையின்றி நீட்டிக்கப்பட்டபோதிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற மறுஆய்வு மாநாடுகள் எவ்வித முன்னேற்றத்தையும் காண்பதில் சிரமங்களைச் சந்தித்தன.
- அணு ஆயுத வல்லரசுகள் தங்கள் வசம் உள்ள அணு ஆயுதக் குவியல்களைக் குறைப்பது குறித்து விவாதிக்கவோ அல்லது உறுதியான ஒப்பந்தங்களை எட்டவோ பெரும்பாலும் மறுக்கின்றன என்பதே இந்த ஒப்பந்தத்தின் மீதான ஒரு முக்கிய விமர்சனமாகும்.
- உக்ரைன் போர் மற்றும் அதில் ரஷ்யாவின் ஈடுபாடு ஆகியவை சார்ந்த பதற்றங்களே, 2022-ஆம் ஆண்டு நடைபெற்ற மறுஆய்வு மாநாடு தோல்வியடைய முதன்மையான காரணங்களாக அமைந்தன.

(v) ஈரான் குறித்த முட்டுக்கட்டை நிலை

- மிகச் சமீபத்தில் நடைபெற்ற மாநாட்டின் தோல்விக்கு, ஈரான் அணுசக்தி விவகாரமே பெருமளவில் காரணமாக அமைந்தது.
- தனது அணுசக்தி நிலையங்களை ஆய்வு செய்ய IAEA-வை அனுமதிக்க மறுப்பதன் மூலம், ஈரான் ஒப்பந்த விதிமுறைகளை மீறிவிட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.
- தனது அணுசக்தி மையங்கள் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் சட்டவிரோதத் தாக்குதல்களை நடத்துவதாகக் குற்றம் சாட்டி ஈரான் பதிலடி கொடுத்ததுடன், இந்தச் செயல்களை மாநாட்டுத் தீர்மானம் அதிகாரப்பூர்வமாகக் கண்டிக்க வேண்டும் என்றும் கோரியது.
- இந்த விஷயங்களில் இரு தரப்பினரும் சமரசம் செய்துகொள்ள மறுத்ததே மாநாடு தோல்வியடையக் காரணமாக அமைந்தது.

(vi) உலகளாவிய கொள்கைக் கவலைகள்

- அமெரிக்கா மிகவும் கடுமையான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறது, இது அணுசக்தி இல்லாத நாடுகள் அமைதியான எரிசக்தித் தேவைகளுக்காகக் கூட தொழில்நுட்பத்தை அணுகுவதைத் தடுக்கிறது.
- அணுசக்தி இல்லாத நாடுகள் இந்தத் தடைகளை எதிர்கொள்ளும் அதே வேளையில், நிலைபெற்ற அணுசக்தி நாடுகள் தங்கள் ஆயுதங்களைக் குறைப்பது குறித்த அர்த்தமுள்ள உரையாடலைத் தொடர்ந்து தவிர்த்து வருகின்றன, இதனால் முழுமையான ஆயுதக் குறைப்பு என்ற இலக்கு நிறைவேறாமல் போகிறது.